

▲ சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் ரயில் இயக்கம், வசதிகள், தொழில்நுட்பங்கள் குறித்து அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதன்படி, நேற்று மாணவர்களை சென்னை சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் மற்றும் பரங்கிமலைக்கும் வண்ணாரப்பேட்டையில் இருந்து ஏ.ஜி-டி.எம்.எஸ். வழியாக விமான நிலையத்துக்கும் மெட்ரோ ரயிலில் கல்விப் பயணமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.